# மனிதர் கழிவை மனிதர் அள்ளும் கொடுமை இனியுண்டோ?

- ஞாநி

*நவம்பர் 28 அன்று தமிழ்நாட்டில் ரயில் மறியல் நடத்தப் போவதாக ஆதித்தமிழர் பேரவை என்ற அமைப்பு அறிவித்திருக்கிறது.*

*ரயில் பயணம் எனக்குப் பிடித்தமானது. பஸ் பயணத்தின் சிரமங்கள் எதுவும் ரயில் பயணத்தில் கிடையாது. சின்னச் சின்ன ரயில் நிலையங்களின் அழகைப்பற்றி, மறைந்த எழுத்தாளர் சுந்தரராமசாமி மிகுந்த ரசனையுடன் வர்ணித்து எழுதியிருக்கிறார்.*

*மனதுக்குப் பிடித்தமான ரயில் பயணத்துக்கு எதிராக இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிற ரயில் மறியல் எதற்காக என்பதுதான் நம் கவனத்துக்குரிய விஷயம். இதுவரை, இப்படி ஒரு கோரிக்கைக்காக இந்தியாவில் மட்டுமல்ல, உலகில் எங்கேயுமே ரயில் மறியல் நடத்தப்பட்டது இல்லை.*

*அப்படி என்ன வித்தியாசமான கோரிக்கை அது?*

*பல வருடங்களுக்கு முன் கமல்ஹாசன், ஒரு பத்திரிகைப் பேட்டியில் சொன்ன ஒரு வாக்கியம், இன்னமும் என் மனதில் நிலைத்திருக்கிறது. 'நம் ஒவ்வொருவர் உடம்பிலும் எப்போதும் ஒரு அவுன்ஸ் மலம் இருந்துகொண்டுதான் இருக்கிறது' என்பதுதான் அந்த வாக்கியம், ரயில் மறியல், மலம் பற்றியதுதான்!*

*மனிதக்கழிவு, நினைக்கவே அருவருப்பானது. ஆனால், கழிவு உறுப்புகள் ஒழுங்காக வேலை செய்யாவிட்டால்., மனிதனின் வாழ்க்கையே நரகமாகிவிடும். கழிவு பற்றிய அருவருப்பு நமது மொழியைக்கூட மாற்றியமைக்கிறது. ஆங்கிலத்தில் சகஜமாக 'ஷிட்' என்று சொல்பவர்கள்கூட, தமிழில் 'பீ என்று சொல்லுவதில்லை. மலம் என்று சொல்லக்கூட அருவருப்பு அடைகிறோம்.*

சுமார் 28 வருடங்களுக்கு முன், பிரபல எழுத்தாளர் தி.ஜானகிராமனின் மகன் சாகேதராமன், கணையாழி இதழுக்கு அனுப்பிய சிறுகதை ஒன்றைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மனிதக் கழிவிலிருந்து எரிவாயு தயாரிக்கும் பிரமாண்டமான அரசாங்கத் திட்டம் பற்றிய கதை அது. அதில் வகை வகையான மனிதக் கழிவுகள் பற்றி சாகேத் தத்ரூபமாக வர்ணித்திருப்பார். அந்த வர்ணனை ஆசிரியர் குழுவுக்கு ஏற்படுத்திய குமட்டல் காரணமாகவே, கதையை வெளியிட இயலவில்லை.

இவ்வளவு அருவருப்பை ஏற்படுத்தும் மனிதக் கழிவைக் கையால் அள்ளி அப்புறப்படுத்தும் வேலையில், இந்தியாவில் சுமார் ஆறரை லட்சம் பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு வீட்டுக்கு மாதம் பத்து ரூபாய் என்ற விகிதத்தில் இவர்களுக்குக் கூலி தரப்படுகிறது.

இந்தியாவில் ஏறத்தாழ ஒரு நாளைக்கு 90 கோடி லிட்டர் சிறுநீரும், 14 கோடி கிலோ மலமும் திறந்தவெளியில் கழிக்கப்படுவதாக அரசுப் புள்ளிவிவரம் கூறுகிறது.

மலம் அள்ளும் வேலை, உலர் கழிப்பறைத் தடுப்புச் சட்டம் 1993-லேயே மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டது. 2002-ல் 16 மாநிலங்கள் இதை ஏற்றுக் கொண்டன. ஆனாலும், இன்னமும் மனிதர் கழிவை மனிதர் அள்ளும் அவலம் தொடர்கிறது. தமிழ்நாடு உள்பட, எந்த மாநிலமும் இதற்கு விதிவிலக்கல்ல. மதுரையில் திறந்த வெளிக் கழிப்பறையாக மக்கள் ஆக்கியுள்ள பெருமாள் கோயில் சந்தையை, தினசரி காலை 6 முதல் 9மணி வரை தன் கைகளால் சுத்தப்படுத்தும் மாரியம்மாளைப் பற்றி இளைஞர் அமுதன் எடுத்துள்ள குறும்படம் 'பீ' ஒரு முக்கியமான ஆவணம்.

ரயில் பயணத்தை வசதியாக்கும் அம்சங்களில் ஒன்று, அதில் உள்ள கழிப்பறை. தற்போது நமது ரயில் பெட்டிகளில் உள்ள கழிவறை அமைப்புகள், ரயில் ஓடும் இருப்புப் பாதையை அசுத்தப்படுத்துகின்றன. இந்த இருப்புப் பாதைகளில் உள்ள மலத்தைக் கையால் அள்ளிச் சுத்தப்படுத்தும் பணியில் ஆயிரக்கணக் கானவர்களை ரயில்வே நிர்வாகம் ஈடுபடுத்தி வருகிறது. இவர்கள் எல்லோரும் சாதி அடிப்படையிலேயே இந்த வேலைக்கு நியமிக்கப் படுகிறார்கள் என்பது இன்னொரு கேவலம். கையால் மலம் அள்ளும் நடைமுறையைக் கைவிடக் கோரியே, ரயில் மறியலை ஆதித் தமிழர் பேரவை அறிவித்து இருக்கிறது.

உலகில் பல இடங்களில் ரயில்கள் ஓடுகின்றன. அவற்றிலும் கழிப்பறைகள் உண்டு. ஆனால், அவற்றைச் சுத்தப்படுத்த எளிமையான கருவிகள், வேக்குவம் க்ளீனர் போன்றவை அங்கே பயன்படுத்தப் படுகின்றன. கோயில் மணி அடிக்க இயந்திரம் வைத்திருக்கும் நமது தேசத்திலும் அது சாத்தியம்தான்.

*ஆதித்தமிழர் பேரவை ஒன்றும் காங்கிரஸ், பி.ஜே.பி, தி.மு.க, அ.இ.அ.தி.மு.க போல பெரிய கட்சி அல்ல என்பதால், இவர்களால் நிஜமாகவே எந்த ரயிலையும் நிறுத்த முடியாமல்கூடப் போய்விடலாம். ஆனால், "ஒரு அவுன்ஸ் மலம், உன் உடம்பில் மட்டும்தான் இருக்கிறதா, உள்ளத்திலும் இருக்கிறதா?" என்ற கேள்வியை மனிதக் கழிவை மனிதர் அள்ளுவதைக் கண்டுகொள்ளாமல் இருக்கும் ஒவ்வொருவரின் மனதிலும் எழுப்பினால், அதுவே வெற்றிதான்!*

- *ஆனந்தவிகடன்,* ***20-11-2005***